DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 112 /2015

PROSECUTION WITNESS L.W. 5/P.W.9

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜசேகர் | Caste | : | |
| Father's Name | : | மாதய்யன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

(1 ,2 எதிரிகள் ஆஜர் இல்லை. 1,2 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. 3 முதல் 5 எதிரிகள் ஆஜர்.)

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 18.12.2023.

**C.M.P. No. 20359 /2023 மனு இன்று 18.12.2023- ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் முதல் விசாரணை**

**முதல் விசாரணை**

1. நான் ஓமலூரில்குடியிருந்து கொண்டு தற்போது கூரியரில் பணிபுரிந்து வருகிறேன்.

2. இராமச்சந்திரனை எனக்குத் தெரியாது. சதீஷ்குமார், வினோத் குமாரை எனக்குத் தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியுமா என்றால் பார்த்ததில்லை. வழக்கு பற்றியும் எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161 ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் 02.07.2013 ம் தேதி மேட்டுரில் உள்ள ஐசிஐசிஐ வங்கியில் கணக்கு எண்ணில் 155901502709 வங்கிக் கணக்கு துவங்கினேனா என்றால் ஆமாம். அந்த வங்கிக் கணக்கிற்குக் ஏடிஎம் கார்டு கொடுத்தார்களா என்றால் ஆமாம். பின் எனது வங்கி ஏடிஎம் கார்டை வினோத்குமார் என்பவர் தனது அப்பா வெளியூரில் வேலைசெய்து வருவதாகவும் அவர் அங்கிருந்து பணம் அனுப்புவதற்கு ஏடிஎம் கார்டு இருந்தால் பரவாயில்லை என்று இராமச்சந்திரன் கேட்டுக் கொண்டதன் பேரில் வினோத்குமாருக்கு ஏடிஎம் கார்டை நான் கொடுத்தேனா என்றால் ஞாபகம் இல்லை.

2. எனது ஏடிஎம் கார்டை வினோத்குமார் 10 நாட்கள் கழித்து கொடுத்ததாக வாங்கிக் கொண்டதன் பேரில் அவரை தொடர்பு கொள்ளும்போது பதில் ஏதும் இல்லை, நேரிலும் பார்க்க முடியவில்லை என்றால் எனக்குத் தெரியாது. அதன்பின் வினோத்குமார், ராம்கி, சதீஷ்குமார், அலாவூதின், விஜய், ஆகியோருடன் சேர்ந்து இதேபோல் பலரிடம் ஏடிஎம் கார்டுகளை வாங்கி தவறாகப் பயன்படுத்தி நம்பிக்கை மோசடி செய்து கைது செய்யப்பட்டுள்ளார்களா என்றால் எனக்குத் தெரியாது.

3. மேற்படி சம்பவம் எனக்கு தெரியும் எனவும் ஆனால் எதிரிகள் எனக்கும் தெரிந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 112 /2015

PROSECUTION WITNESS L.W. 10/P.W.8

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கிருபாகரன் | Caste | : | |
| Father's Name | : | லோகநாதன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

(1 ,2 எதிரிகள் ஆஜர் இல்லை. 1,2 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. 3 முதல் 5 எதிரிகள் ஆஜர்.)

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 18.12.2023.

**முதல் விசாரணை**

1. நான் பவானியில் குடியிருந்து கொண்டு தற்போது தனியார் வங்கியில் பணிபுரிந்து வருகிறேன்.

2. தினேஷ்குமார், லெனின், சதீஷ்குமார் மற்றும் மணிகண்டன் ஆகியோர்களை எனக்குத் தெரியாது. சதீஷ்குமார், வினோத் குமாரை எனக்குத் தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது. வழக்கு பற்றியும் எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161 ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை: